அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு ஐப்பசி - கார்த்திகை நவம்பர் 2016 முரசு 10 ஒலி 113



திருகார்த்திகை தீபத் திருவிழா அழைப்பிதழ் &
ஆழ்நிலை தியான முகாம் அழைப்பதழ் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/-

ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப திருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம்! நினைத்தாலே முக்தி தரும் திருஅருணை அருணாச்சல திருத்தலத்தில் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி தரிசனம் செய்கின்ற தீப திருநாளினை முன்னிட்டு நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் வெகு விமரிசையாக மஹாஅன்னதானம், சாதுக்கள் சத்சங்கம் மற்றும் திருஅருட்பா இசை கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கிய பெருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வமயம் தாங்கள் அனைவரும் வருகை தந்து தொண்டில் பங்கேற்று குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.



**நாள்: 12.12.2016 திங்கட்கிழமை**

**இடம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருவண்ணாமலை.**

## நிகழ்ச்சி நிரல்:-

### அகவல் பாராயணம்

சன்மார்க்க சங்க அன்பர்கள்,

### சத்சங்கம்

தயவுதிரு மு.பா. பாபு, சென்னை

கோடையிடி புலவர் திரு. கங்கை மணிமாறன் – சீர்காழி

அருட்ஜோதி டிவி புகழ் திருமதி. பிரபாவதி சென்னை

தயவுதிரு கண்ணன் அடிகளார், சேலம்

### திருஅருட்பா இசைக் கச்சேரி

தயவுதிரு சண்முகம் & குழுவினர், கடலூர்

தயவுதிரு கலை செல்வன் & குழுவினர், சிதம்பரம்

மக்கள் டிவி புகழ் தயவு திருமதி. மதி & குழுவினர், சென்னை

தயவுதிரு ஜீவ.சீனுவாசன் & குழுவினர், திருக்கோயிலூர்

### மஹா அன்னதானம்

### திருஅருட்பா இலவச புத்தகம் வழங்குதல்

அன்பர்களை இந்த சத்சங்க விழாவின் அறப்பணிகளுக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துப் புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொண்டு உய்யுமாறு வேண்டுகிறோம்.

1) மஹா அன்னதானம் 2,000 நபர்களுக்கு ------------------ ரூ. 75,000/–
2) பிரசாதம் --- கேசரி 30கிலோ ------------------ ரூ. 10,000/–
சுக்கு காபி 10,000 நபர்களுக்கு ------------------ ரூ. 10,000/–
3) திருஅருட்பா இலவச புத்தகம் 20,000 நபர்களுக்கு ---------- ரூ. 25,000/–
4) சொற்பொழிவாளர்கள் மற்றும் இசை கலைஞர்களுக்கு ---- ரூ. 30,000/–
5) பந்தல் மற்றும் ஒலி, ஒளி அமைப்பிற்கு ------------------ ரூ. 25,000/–
6) 10 விழாநாட்களிலும் 1 நாள் அன்னதானத்திற்கு ---------- ரூ. 6,500/–

அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை வழங்க அறக்கட்டளையின் வங்கிக் கணக்கிற்கு பக்கம்; எண் 26ஐ பார்க்கவும்.

**அனைவரும் வருக! திருவருள் பெறுக!**

தொடர்புக்கு:
**9443489849**

# உட்பகைகள் ஆறு

**சினம் முதல் அனைத்தையும் தீர்த்து, எனை நனவினும்**
**கனவினும் பிரியாக் கருணை நற்றாயே!**

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் இவை ஆறும் மனிதர்களுக்குள்ள உட்பகைகளாம். இவ்வாறும் 'அறுபகை' என்று ஒன்றாகத் தொகுத்துக் கூறப்பெறும். இவை நமக்கு வெளியே இல்லாமல் நமக்கு உள்ளேயே இருப்பதால் உட்பகை (உள் பகை) என்றும் கூறப்பெறும்.

இதனில், கோபம் எப்போதாவதுதான் ஏற்படுகிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கலாம். இந்த நினைப்பு தவறு. நாம் ஒரு நாளின் இருபத்துநான்கு மணிநேரமும் கோபத்தில்தான் இருக்கிறோம்! சில சமயம் அது அதிகமுள்ளது, சில சமயம் அது குறைவாயுள்ளது. ஆனால் நாம் ஒரு நாளின் இருபத்து நான்கு மணிநேரமும் கோபத்திலேயேதான் இருக்கிறோம். கோபம், தனக்குச் சாதகமான ஒரு வாய்ப்பினைத் தேடிக் கொண்டேயிருக்கும். கோபம் உள்ளே தயாராய்தான் உள்ளது. அது வெளியேறி கோபம் என்று காட்டிக்கொள்ள வெளியுலகில் ஒரு சந்தர்ப்பத்தினை நாடிக் காத்திருக்கிறது. காரணமேயில்லாமல் நாம் கோபமடைந்தால், அப்போது அனைவரும் நம்மைப் பைத்தியம் என நினைத்துக் கொள்வார்கள். ஒருவேளை நாம் கோபம் கொள்ள சந்தர்ப்பங்களே அமையாமல் போனால், காரணமே இல்லாமல்கூட நாம் கோபங்கொள்ள ஆரம்பித்து விடுவோம். இப்படி நடப்பது நமக்குத் தெரியாமலிருக்கலாம், அவ்வளவே.

ஒரு ஞானி இதனை எகிப்து நாட்டு சக்கரவர்த்தியிடம் சொன்னார். ஆனால் அவரோ இதை நம்பவில்லை. எனவே ஆரோக்கியமான ஒரு நபரை நாட்டிலிருந்து தேர்ந்தெடுத்து அவனை ஆறு மாதங்கள் தனிமையான ஓர் அறையில் பூட்டி வைக்குமாறு சக்கரவர்த்தியை ஞானி கேட்டுக் கொண்டார்.

இதற்கான தெரிவு நகரத்தில் நடைபெற்றது. எல்லா வகைகளிலும் ஆரோக்கியமாய் வாழும் ஓர் இளைஞன் தேர்வானான். அவனுக்கு திருமணமாகி ஒரு குழந்தையிருந்தது. கை நிறைய சம்பாதித்தான். சந்தோஷமாயிருந்தான். அவன் சக்கரவர்த்தியிடம் அழைத்து வரப்பட்டான். அரசர் அவனிடம் பேசினார்.

"உனக்கு நாங்கள் எவ்விதமான சங்கடங்களும் தரமாட்டோம். நாங்கள் ஒரு சிறு ஆய்வினை மேற்கொள்கிறோம். உன் குடும்பம்

அரசாங்கத்தினால் பராமரிக்கப்படும். உணவு, உடை மற்றும் அனைத்து வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படும். நீ செய்து தருவதைவிடவும் சிறப்பான வசதிகள் அவர்களுக்கு இப்போது அமைந்துவிடும். உனக்கும் எல்லா வசதிகளும் தரப்படும். ஆனால் நீ ஆறு மாத காலத்துக்கு தனிமையில் இருக்க வேண்டும்" என்றார்.

அவன் ஒரு பெரிய வீட்டுக்குள் அடைக்கப்பட்டான். அவனுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டன. ஆனால் சூழல் மட்டும் முற்றிலும் தனிமையானது. அவனுக்கு காவலாயிருந்த ஆளுக்குக்கூட இவனுடைய மொழி தெரியாது, ஆகவே இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடியாது.

ஓரிரு நாட்கள்தான் கடந்தன. அவன் படபடப்பாய் உணர ஆரம்பித்தான். அவனுக்கு எல்லா வசதிகளும் பார்த்துப் பார்த்து தரப்பட்டிருந்தன. அவனுக்கு எந்த குறையும் அங்கு கிடையாது. நேரத்துக்கு சாப்பாடு உண்டு. அவன் தேவைப்பட்ட நேரத்தில் தூங்கப் போய்விடலாம். அது அரசாங்க அரண்மனை. ஆகையால், அவனுக்கு அங்கு இல்லாத வசதிகளே கிடையாது. கஷ்டங்களே இல்லை. உட்கார்ந்த இடத்திலிருந்தே என்னவெல்லாம் வேண்டுமோ அனைத்தையும் அவன் செய்து கொள்ளலாம். அப்படியொரு ராஜபோகம். அவனுக்குள்ள ஒரேயொரு குறை என்னவென்றால், அவனால் வேறு ஒருவருடனும் பேச முடியாது, யாரையும் அவனால் சந்திக்க முடியாது.

ஓரிரு நாட்களுக்கு பின்பு அவன் சிக்கலாய் உணர ஆரம்பித்தான். இருப்புக் கொள்ளாமல் ஆனான். எட்டு நாட்கள் ஆனதும் வாய்விட்டே கத்த ஆரம்பித்து விட்டான். "இங்கிருந்து என்னை வெளியே கொண்டு போய் விடுங்கள்! என்னால் இங்கு தங்கியிருக்க முடியாது!" என கூச்சலிட்டான்.

என்னதான் பிரச்சினை? எங்குதான் பிரச்சினை? பிரச்சினை உள்ளிருந்து ததும்பி வெளிவர ஆரம்பித்துள்ளது. **வெளியிலிருந்து தான் பிரச்சினைகள் உருவாகின்றன என நேற்று வரை நினைத்திருந்தவன், இன்று, தன்னந்தனிமையில் இருக்கும்போது அவை தனக்குள்ளேயேதான் உருவாகின்றன என்பதைக் கண்டு கொண்டான்.**

ஆறே மாதங்களில் மனிதன் பைத்தியமாகிப் போனான். ஆறு மாதங்களுக்கு பிறகு அவன் வெளியே கொண்டு வரப்பட்டபோது அவன் முற்றிலும் மூளை சுவாதீனம் இழந்து பைத்தியமாகிப் போயிருந்தான். தனக்குத்தானே பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தான். அவன் தன்னைத்தானே சபித்துக் கொண்டான். தன் மீதே அவன்

கடுங்கோபம் கொண்டான். தன்னையே அவன் நன்கு நேசிக்கவும் செய்தான். ஆறு மாதங்கள் கழிந்த பிறகு அவன் ஒரு பைத்தியக்காரனாய் மீட்கப்பட்டான். அவன் பழைய நிலைமையை அடைய சுமார் ஆறு வருடங்கள் பிடித்தன.

இதனால்தான் தனிமையைக் கண்டாலே ஒரு மனிதன் அஞ்சுகிறான். தனிமையில் வெளியுலகத்திலிருந்து எவ்வித காரணங்களும் இடைப்புக வாய்ப்பு கிடையாது. ஆயினும் சந்தோஷம் - துக்கம் என எதிரெதிர் உணர்வுகளை எவ்வித காரணங்களும் இல்லாமலே ஒருவன் உணர்கிறான். எனவே அனைத்து எதிரும் புதிருமான குணங்களும் நமக்குள்ளேயே இருப்பதாகத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம் இதயத்தின் தந்திகள் வலுவிழந்துள்ளன. அதிலிருந்து கோபம் மட்டுந்தான் வெளிவருகின்றது. குழப்பங்களும், தடுமாற்றங்களும், ஒற்றுமையில்லாமையும், பகைமையும், பொறாமையும், வெறுப்பும்தான் அதிலிருந்து வெளிப்படுகின்றன. நல்லிசை உருவாக முடியாது.

இவைகள் அறிவை மறைத்து செயல்படுவன. அறிவு ஒளியாகிய ஞானத்திற்கு எதிர்மறையானது இருள் என்பதால் இதனை சான்றோர்கள் அஞ்ஞானம் என்றனர்.

நம்முடைய இதயத்தின் தந்திகள் வலுவடைய வேண்டும். அன்பு அப்போதுதான் அதிலிருந்து வெளிப்படும்.

இதுவரை நம்முள்ளே அன்பு இருப்பதாக நாம் நினைத்து கொண்டிருப்பது எதிர்பார்ப்புகளுடன் கூடியதாகவும், குறுகிய வட்டத்துக்குள் செயல்படுவதாகவும் இருக்கிறது.

அதற்கு காரணம், நம்மை அறியாமலேயே உள்ளிருந்து இயக்கி கொண்டிருக்கும் காமம், கோபம், மோகம், லோபம், மதம், மாச்சரியம் என்கிற உட்பகைவர்களே.

இதற்கு சரியான தீர்வுதான் என்ன? நம் இதயத்தின் தந்திகளை எப்படி தான் வலுவடைய செய்வது?

வாழ்க்கைக்குரிய ஒழுக்க நெறிகளை கடைப்பிடிக்க எண்ணம் கொள்ளுதல் அவசியம். அவைகள் எதுவென்றால் மற்றவர்களுடன் இனிய சொற்களை பேசுவது, பிறர் குற்றங்களை சகித்து விருப்பு வெறுப்பின்றி பழகுவது, சுயநலமின்றி தன்னை மதியாது பிறர் நலத்தில் அக்கறை செலுத்துவது ஆகியவைகளே ஒருவரை தீய குணங்களிலிருந்து விலகி நிற்கச் செய்கிறது.

இதனை எளிதில் பழகிக்கொள்ள நாம் விரிந்த மனத்துடன் பிறரிடத்தில் அன்பு செலுத்துவது அவசியம் என்பர் ஆன்றோர்.

**உயிர் எலாம் பொதுவின் உளம்பட நோக்குக**
**செயிர் எலாம் விடுக எனச் செப்பிய சிவமே – அகவல் (969,970)**

எல்லா உயிர்களையும் பொதுவாகப் பாவித்தல். தன்னைப்போல் பாவித்தல், தன்உயிர்போல் பாவித்தல் பாவித்து ஒழுகுதல். உயிர்கள் அனைத்தையும் ஒன்றாக காண்பதற்கு கோபம் முதலிய குணங்கள் பெருந்தடைகளாக இருத்தலின் ‘செயிர் எலாம் விடுக’ என வள்ளற் பெருமானார் இயம்புகின்றார்.

செயிரை விடுத்து உயிர்களையெல்லாம் பொதுப்பட நோக்க வேண்டும் என்பது கருத்து.

இதில் உற்று அறிய வேண்டிய கருத்து என்னவென்றால் நாம் உயிரையெல்லாம் பொதுப்பட நோக்கி அன்பு செலுத்துவதினால் சினம் முதலான உட்பகைகள் நம்மைவிட்டு மெல்ல மெல்ல அகன்று விடுமென்பதை உணரலாம்.

எனவே நம் இதயத்தின் தந்திகள் வலுவடைய பொது உணர்வாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை பழகி உட்பகைவர்களை வென்று சுகம் பெறுவோமாக.


## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

### *வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்*

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.


1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000

2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000

3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000


## *மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்*




**வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே**
**வந்தால் பெறலாம் நல்ல வரமே – வள்ளலார்.**

| | | |
|---|---|---|
| 19-11-2016 | சனி | மாதப்பூசம் |
| 16-12-2016 | வெள்ளி | மாதப்பூசம் |
| 13-01-2017 | வெள்ளி | மாதப்பூசம் |

# சாசுவதமான சுகம்

**சிருங்கேரி மகான் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ சுவாமிகள் பக்தர் ஒருவரின் சந்தேகங்களுக்கு உரையளித்து அருளியது...**

**ம – மகான்; ப – பக்தர்**

**ம:** ஒருவன் மூன்று லோகங்களுக்கும் அதிபதியாய் இருக்கலாம்; அவனே துக்கியாகவும் இருக்கலாம். இன்னொருவன் பிச்சைக்காரனிலும் பிச்சைக்காரனாய் இருக்கலாம்; உலகத்தில் அவனுக்கு ஸமமான ஸுகி கிடையாதென்றும் இருக்கலாம்.

**ப:** வாஸ்தவம் தான். அப்படியானால் ஸுகம் என்பது எதைப் பொறுத்தது?

**ம:** ஸாதாரணமாக, நாம் ஆசைப்படும் பதார்த்தம் கிடைத்துவிட்டால் ஸுகமடைகிறோமல்லவா?

**ப:** ஆம்.

**ம:** அப்பதார்த்தத்தை ஆசைப்பட்டுக் கொண்டு மாத்திரமிருந்த சமயத்தில், நம்முடைய மனது சஞ்சலத்திற்கு உட்பட்டிருந்தது. பதார்த்தம் கிடைத்தவுடன், அந்த சாஞ்சல்யம் நின்று மனதில் அமைதி ஏற்படுகிறது.

**ப:** ஆம்.

**ம:** அதே மாதிரி, நமக்கு அருவருப்பாய் இருக்கிற ஒரு வஸ்துவை விலக்கி விட்டோமேயானாலும், ஸுகம் அடைகிறோமல்லவா?

**ப:** ஆம்.

**ம:** அருவருப்பு மாத்திரமிருந்துவரும் சமயத்தில், மனது சஞ்சலமாயிருக்கிறது. அவ்வஸ்துவை விலக்கியவுடன், இந்த சாஞ்சல்யம் நின்று அமைதி ஏற்படுகிறது.

**ப:** அப்படியே.

**ம:** ஆகையால், **இரண்டு வழியாக ஸுகம் அடைவதிலும், ஸுகம் என்பது மனது அமைதியை அடைவது என்பதைத்தவிர வேறு இருப்பதாகத் தெரியவில்லை.** அமைதிக்குக் காரணம் ஆசைப்பட்ட வஸ்து கிடைத்ததாய் இருந்தாலும், வெறுக்கப்பட்ட வஸ்து விலகியதாய் இருந்தாலும், அமைதிக்கு இடைஞ்சலாயிருந்த சாஞ்சல்யம் நிவிருத்தியானவுடன், அமைதி ஏற்பட்டு ஸுகம்

சாஞ்சல்யம் - கலக்கம், நிவிருத்தி - நீக்கம், மன்னியில் - இல்லையில்

ஸித்திக்கிறது என்பது வாஸ்தவமில்லையா?

**ப:** ஆம்.

**ம:** முன்னிருந்த சாஞ்சல்யம் நிவிருத்தியானால் அமைதி ஏற்படுமென்றிருப்பதால், அந்த நிவிருத்தி இன்னவிதமாகத்தான் ஏற்பட வேண்டும் என்று நியமம் செய்ய அவசியமுண்டா? சாதாரணமாக, ஒரு வஸ்துவை அடைவதும் மற்றொன்றை விலக்குவதும் சாஞ்சல்யத்தை நிறுத்த உபயோகப்படுகிறதென்பது வாஸ்தவம். இந்த இரண்டு விதங்களைத் தவிர, வேறு விதமாகவும் இந்த சாஞ்சல்யத்தை நிறுத்திக்கொள்ள சாத்தியமானால், அப்பொழுதும் ஸுகம் ஸித்தித்துத் தானே தீர வேண்டும்?

**ப:** ஆம்.

**ம:** நமக்கு ஆசையை உண்டு பண்ணக்கூடிய பதார்த்தங்கள் உலகில் ஏராளமாய் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பதார்த்த விஷயமான ஆசையினால் மனது சஞ்சலப்பட்டால், அது கிடைத்தவுடன் அது விஷயமான சாஞ்சல்யம் நின்று விடும் என்பது வாஸ்தவம். ஆனால் அடுத்த க்ஷணத்திலேயே, இன்னொரு பதார்த்த விஷயமான சாஞ்சல்யம் நம் மனதைப் பாதிக்க ஆரம்பிக்கும். இப்படியே, ஆசைப்படக் கூடிய பதார்த்தங்கள் ஏராளமாய் இருப்பதால், இவ்விதமே சாஞ்சல்யமும் நிவிருத்தியும் ஓய்வில்லாமல் இருந்து கொண்டேயிருக்கும். ஆகையால் விஷய ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதன் மூலம், நம் மனதுக்கு சாசுவதமான அமைதியை உண்டு பண்ணுவது சாத்தியமில்லாத காரியம். அப்படியே, வெறுக்கத்தகுந்த பதார்த்தங்களும் அனந்தம். ஒரு பதார்த்தத்தை விலக்குவதன்மூலம், தற்காலிகமாய் மனதுக்கு அமைதி ஏற்பட்டாலும், மறு க்ஷணத்தில் மற்றொரு வெறுக்கத்தக்க பதார்த்தம் நம் மனதைப்பாதிக்க ஆரம்பித்துவிடும். அதையும் விலக்க வேண்டும். அப்புறம் வேறொன்றை விலக்க வேண்டும். உலகத்தில், நமக்கு துன்பத்தைக் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களை எல்லாம் கணக்கிட முடியாததால் வெறுப்பு, நிவிருத்தி; வெறுப்பு, நிவிருத்தி என்று ஓயாமல் இருந்தே தீரும். ஆகையால் வெறுப்புக்கு விஷயமான பதார்த்தங்களை விலக்கியோ, அவைகளில் சம்பந்தம் ஏற்படாமல் இருக்கும்படியோ பார்த்துக்கொண்டு சாசுவதமான அமைதியை அடைந்து விடலாமென்பதும் அசாத்தியமான காரியம்.

**ப:** ஆனால், அமைதி வேண்டுமென்று மாத்திரம் எல்லாருக்கும் தோன்றுகிறதே?

**ம:** தோன்றுகிறதென்பது வாஸ்தவம். ஆனால், மனது விரும்பும்

பதார்த்தங்களை எல்லாம் அதற்குக் கொடுத்தோ, அதை பாதிக்கும் பதார்த்தங்களை எல்லாம் விலக்கியோ அந்த அமைதியை சம்பாதித்து விடலாம் என்று நினைத்தால், ஒரு நாளும் நடக்காது. மேலும், ஒரு பதார்த்தத்தை அடையவாவது மற்றொன்றை விலக்கவாவது வேண்டிய முழு சக்தியும் நம்மிடம் இல்லையென்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். பார்க்கப்போனால், வெளியில் உள்ள பதார்த்தங்களால் நமக்கு ஸுகமேற்பட வேண்டுமென்று இருந்தோமேயானால் நம்முடைய அடிமைத்தனத்திற்கு அளவேயில்லை.

**ப:** அப்படியானால், அமைதியும் ஸுகமும் நமக்கு எப்படித்தான் கிடைக்கும்?

**ம:** ஒருவன் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமானால், அதற்கு முன் அவன் அனாரோக்கியத்துடன் இருந்திருக்க வேண்டுமென்ற நியமம் உண்டா?

**ப:** இல்லை.

**ம:** முதலில் வியாதிக்ரஸ்தனாயிருந்து, பிறகு அதிலிருந்து விடுபட்டவனைத்தான் ஆரோக்கியமுள்ளவன் என்று சொல்ல வேண்டுமென்பது மிகவும் அசட்டுத்தனமாகும். அவனை ஆரோக்கியமுள்ளவன் என்று சொல்லலாம். ஆனால் அவனை மட்டும்தான் அப்படிச் சொல்ல வேண்டுமென்பது சரியல்ல. ரோகமின்மை என்பது ஆரோக்கியமாகுமே தவிர, ரோகம் முன் இருந்து இப்பொழுது இல்லை என்பதும் வேண்டுமா?

**ப:** வேண்டியதில்லைதான். பிரகிருதத்தில்?

**ம:** அப்படியே, ஸுகம் என்பது துக்கமில்லாமல் இருப்பது என்று அர்த்தமாகலாமே தவிர, முன் துக்கமிருந்து இப்பொழுது நிவிருத்தியாய் இருந்தால்தான் ஒருவனை ஸுகியென்று சொல்லலாம் என்றாகாது. ஒரு குறிப்பிட்ட பதார்த்த சம்பந்தமான விருப்பத்தினாலோ, வெறுப்பினாலோ மனது தன் நிலை தவறி சஞ்சலப்பட்டு பின்பு அப்பதார்த்தம் கிடைத்தவுடனோ, விலகினவுடனோ தன் நிலையை அடைந்து ஸுகத்தை அனுபவிப்பது வாஸ்தவம். இதனால் ஸுகம் அடையும் போதெல்லாம், அதற்கு முன்னால் சாஞ்சல்யம் இருந்தே தீர வேண்டும் என்று சொல்லலாமா?

**ப:** அது சரியாகாது?

**ம:** முன்னால் ரோக விஷயமான அனுபவமில்லாமலே ஒருவன் ஆரோக்கியமாய் இருக்கலாம் என்று தெரிந்துகொள்வது போலவே, மனதுக்கு சாஞ்சல்யமென்ற அவஸ்தை முன்னாலில்லாமலேயே

சுகமாய் இருக்கலாமென்று தெரிந்துகொள்ள வேண்டும். வாஸ்தவத்தில் ரோகம் வந்து நிவிருத்தியான பிற்பாடு ஆரோக்கியம் அடைந்தவனுடைய ஆரோக்கியத்தைவிட, முன்னால் ரோகமே வராமல் ஆரோக்கியமாய் இருந்து வருகிறவனுடைய ஆரோக்கியம், ஸ்வபாவத்திலும் உண்மையிலும் நிலைத்திருப்பதிலும் எவ்வளவோ மேன்பட்டது. அதேமாதிரி, **மனது சஞ்சலப்பட்டு அமைதியடைந்து அப்புறம் அனுபவிக்கும் ஸுகத்தைவிட, சஞ்சலப்படாமலேயே அனுபவிக்கும் ஸுகம் ஸ்வபாவத்திலும் புஷ்டியிலும் நிலைத்திருப்பதிலும் எவ்வளவோ மேலானதே.**

**ப:** வாஸ்தவம்தான். ஆனால் அப்பேர்ப்பட்ட ஸுகம் எப்படிக்கிடைக்கும்? ஸுக சாதனத்தைத் தேடியடைந்து அல்லது துக்க சாதனத்தை விலக்கித்தானே சாதாரணமாய் ஸுகம் கிடைக்கிறது?

**ம:** சாதாரணமாய் அப்படித்தான். அதனால்தான், தேடும் சிரமமும் விலக்கும் சிரமமும் அன்னியில், வேறு மூன்றாவது வழி ஒன்று உண்டென்று முன்னமேயே சொன்னேன். அவ்வழியில் கிடைக்கும் ஸுகம், சந்தேஹமன்னியில் பூர்ணமாகவும் சாசுவதமாகவும் இருக்கும் அல்லவா?

**ப:** இருக்கும்தான். அந்த மூன்றாவது வழி என்ன?

**ம:** அவ்வழி இதுதான். மனதில் சாஞ்சல்யம் ஏற்பட இடம் கொடுக்காமலிருப்பதே.

**ப:** அதெப்படி?

**ம:** வியாதியை உண்டு பண்ணக்கூடிய ஒரு வஸ்துவுக்கும், தான் அகப்பட்டுக் கொள்ளாமல் ஜாக்கிரதையாய் இருந்தால், அவன் ஆரோக்கியமாகவே இருந்து வரலாமல்லவா?

**ப:** ஆம்.

**ம:** அப்படியே, மனதை தன் நிலையிலிருந்து நழுவும்படி செய்து துக்கத்தைக் கொடுக்கக்கூடிய எவ்வித பதார்த்தத்திற்கும், தான் அகப்பட்டுக் கொள்ளாமல் இருந்துவிட்டால், ஸுகமாகவே இருக்கலாமல்லவா? பின்னால் செய்யும் பரிஹாரத்தைவிட, முன்னால் பந்தோபஸ்து செய்து கொள்வது சிலாக்கியம் என்ற ஸாமான்ய நியாயம்தான் இங்கேயும். நான் நிர்மலமாயிருக்கிறேன் என்று சொல்லி கொள்வதற்காக, மலத்தில் கையை விட்டு விட்டு அப்புறம் கழுவியாக வேண்டுமென்ற அவசியமுண்டா?

**ப:** விருப்பத்தின் பூர்த்தியினாலோ, வெறுப்பின் நிவிருத்தியினாலோ ஏற்படுகிற ஸுகம் வாஸ்தவமான ஸுகம் இல்லையென்பதும், விருப்பு

வெறுப்பு இரண்டும் அற்று தன் நிலையிலிருக்கும் மனதின் அனுபவமே வாஸ்தவ ஸுகமென்பதும் தங்கள் அபிப்பிராயமென்று தெரிகிறது.

**ம:** அப்படியே.

**ப:** ஆனால், விருப்பையோ வெறுப்பையோ உண்டாக்கக்கூடிய பதார்த்தங்களே நிறைந்திருக்கிற இப்பெரிய உலகத்தின் மத்தியில் இருந்துகொண்டு தன் நிலையை அடையவாவது, அதிலிருந்து நழுவாமலிருப்பதாவது எப்படி முடியும்?

**ம:** முடிகிறதோ இல்லையோ, உலகத்திலுள்ள அனந்தமான இஷ்டா நிஷ்ட பதார்த்தங்களை எல்லாம் தீர்த்து விட்டு ஸுகத்தை அடைவேன் என்று ஆரம்பிப்பதைவிட இது சாத்தியமான காரியம்தான்.

**ப:** அந்த பிரவிருத்தி அசட்டுத்தனமாய் இருக்கலாம். அதனால் இந்த வழி சாத்தியமென்று ஆகிவிடவில்லையே?

**ம:** ஏன் ஆகாது? **ஓர் அறைக்குள் உங்கள் பார்வையை இழுக்கக் கூடியதாக இருபது பதார்த்தங்கள் இருந்தால், அவைகளை இழுக்க விடாமல் பண்ணுவதற்கு, ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் ஒவ்வொரு மூடி தயாரித்து மூடுவது தேவலையா? அல்லது உங்கள் கண்களை மூடிக்கொள்வது தேவலையா?**

**ப:** கண்ணை மூடிக்கொள்வதுதான் ஸுலபம்.

**ம:** அப்படியே, உலகத்தில் நம் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தக்கூடிய அனந்தமான பதார்த்தங்களை நம் இஷ்டப்படி வைக்கவோ, மாற்றவோ, தொலைக்கவோ, உண்டு பண்ணவோ நம்மால் சாத்தியமில்லை. அவைகள் நம்மை இழுப்பதற்கு இடமில்லாமல், நம் மனதை சரிபடுத்திக்கொள்வது அதைவிட சாத்தியமல்லவா? உங்கள் முன்னோர்கள் ஸுகமாய் இருந்தார்கள் என்றால், அவர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் ஜாஸ்தி இருந்தனவென்றாவது சிரமத்தைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் உங்களுக்கு இருப்பதைவிட அவர்களுக்கு குறைவாய் இருந்தனவென்றாவது அர்த்தமில்லை. இவ்வுலகத்தின் மத்தியில் அவர்கள் இருந்தபோதிலும் அமைதி, சமாதானம், திருப்தி, ஸுகம் இவைகள் இருப்பதற்குக் காரணமான மனஸ் ஸ்வஸ்ததை அவர்களால் காப்பாற்றப்பட்டு வந்தது. வெளியிலுள்ள பதார்த்தங்கள் மூலம் அவர்களுக்கு ஸுகம் ஏற்படவில்லை. தங்களைத் துன்பப்படுத்தக்கூடிய யோகியத்தை புறப் பதார்த்தங்களுக்கு உண்டென்று ஒப்புக்கொள்ளவும் அவர்கள் தயாரில்லை. அவர்களுடைய அமைதி, சமாதானம், திருப்தி, ஸுகம் இவைகள் தன் நிலையில் ஸ்வபாவஸித்தமாயும், பலமாயும், சாசுவதமாகவும் இருந்தன. நீங்களும் ஸுகமாக இருக்க விரும்பினால்

அவர்களுடைய மனோநிலையையே அப்யஸிக்க வேண்டும். மேலும், நமக்கு இம்மனோபாவம் ஸஹஜமாய் இருப்பதால், அதைப் புறக்கனித்து வெளியுலகத்தில் ஸுகத்தைத் தேட ஆரம்பித்தோமேயானால், அடுத்த ஜன்மத்திலும் இதே மனோபாவ ஸௌகர்யம் கிடைக்கும்படியான பாக்கியத்தை இழந்தவர்களாக ஆகிவிடுவோம். ஒரு பதார்த்தத்தை நன்கொடையாகப் பெற்றவன், அது கையிலிருக்கும்போது அதை நன்கு மதிக்கவில்லையென்று கொடையாளிக்குத் தெரிந்தால், மறுபடியும் அதை அவனுக்கு தானம் கொடுக்க ஸம்மதிப்பானா? அதே மாதிரி, பகவானும் நம் விஷயத்தில் இப்பொழுதுள்ள விசேஷ ஸௌகர்யத்தை, மறுபடியும் கொடுக்க மறுத்துவிட்டால், அது நியாயமேயாகும். ஆகையால் உங்களுக்கு ஸ்வபாவஸித்தமாய் ஸஹஜமாயிருக்கும் திருப்தியென்ற பதார்த்தத்தைக் கைவிடாதீர்கள். அப்படியே, உங்கள் கடமை என்கிற ஸ்வதர்மத்தையும் கைவிடாதீர்கள். காலக்ரமத்தில் எல்லாம் க்ஷேமமாகவே முடியும்.

# திருமந்திரம்

**அழுக்கினை ஓட்டி அறிவை நிறையான்**
**தழுக்கிய நாளில் தருமமும் செய்யான்**
**விழித்திருந்து என் செய்வீர் வெம்மை பரந்தது**
**இழிக்க அன்று என் செய்கீர் ஏழைநெஞ்சீரே.**

கருத்து: ஆணவ மலத்தை நீக்கி ஞானம் நிரம்பான். செல்வம் மிகுந்தபொழுது தருமமும் செய்யான். அறியாமை உடைய நெஞ்சே, துன்பம் தோன்றி நிந்தனைக்கு ஆளாக்கும் போது என்ன செய்வாய்? இப்போது விழிப்புடன் இருந்து, அத்துன்பம் தோன்றாத வண்ணம் தடுக்க நீ செய்யும் முன்னெச்சரிக்கைச் செயல் என்ன? ஆணவ நீக்கமும் ஞானமும் தருமமுமே துன்பம் வராமல் தடுக்கவல்லவை.

**திளைக்கும் வினைக்கடல் தீர்வு உறு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு;**
**கிளைக்கும் தனக்கும் அக்கேடு – இல் புகழோன்**
**விளைக்கும் தவம்; அறம் மேல்துணை ஆமே.**

கருத்து: அனுபவிக்கும் வினைகள் ஆகிய கடலினின்று கரையேற்றும் தோணியாவன; பிறவிக்களைப்பை மாற்றுவன ஆகிய இரு வழி உண்டு. தவமும் அறமும். அவற்றை ஆற்றினால் புகழும் அழியாது நிற்கும். உறவுக்கும் தனக்கும் மறுமையில் நற்றுணையாகும்.

# மூத்தோர்சொல் அமிர்தம்

“சிலர் நம்மை பாராட்டுவார்கள். சிலர் நம்மை திட்டுவார்கள். திட்டும்போது நமக்குக் கோபம் வரும். திரும்பத் திட்டலாமா என்று நினைக்கவும் தோன்றும். திட்டினால்? திட்டியவர் உடனே திட்டுவதை நிறுத்திவிடுவாரா? அதுதான் இல்லை, மேலும் திட்டத் தொடங்குவார். நம் வேலையை நிறுத்திவிட்டு, அவர் வசவுக்கு வசவு பதில் சொல்லவே நேரம் சரியாக இருக்கும். எனவே, அவர்கள் ஏன் திட்டுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்து ஏற்றபடி செயல்பட்டால் போதுமானது.”

ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் நண்பர்களோடு காரில் சென்று கொண்டிருந்தார். ஒரு ஊரில் ஒரு பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதில் பேசிய பேச்சாளர் ராஜாஜியை வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருந்தார். காரை நிறுத்தச் சொல்லி, ஒரு ஓரத்தில் யாருக்கும் தெரியாமல் முழுவதும் கேட்டுவிட்டுப் பயணம் தொடர்ந்தார்.

காரில் இருந்த நண்பர் ஒருவர் ராஜாஜியிடம், “ஏன் ராஜாஜி உங்களை அவர்கள் வசைபாடுகிறார்கள்?” என்று கேட்டார். ராஜாஜி பதில் ஏதும் பேசாமல் மௌனம் காத்தார். கொஞ்ச தூரம் சென்றபின் ஒரு மாட்டு வண்டியை ராஜாஜியின் கார் முந்தவேண்டியிருந்தது. ஓரமாகச் செலுத்தி மாட்டு வண்டியைக் கடந்தார். அப்போது மாட்டு வண்டி ஓட்டியவர் டிரைவரை நோக்கி, “மெதுவாப் போங்கடா நாய்ப் பசங்களா” என்று வசைபாடினார். அப்போது காருக்குள்ளிருந்த நண்பர்களிடம் ராஜாஜி, “பார்த்தீர்களா? கார் வேகமாகப் போகிறது. மாட்டு வண்டியால் இதற்குச் சமமாக வரமுடியவில்லை. அந்தக் கோபம்தான் மாட்டி வண்டிக்காரருக்கு. அதனால் நம்மைத் திட்டுகிறார். அவருக்குச் சமமாக நாம் வசைபாடாமல் நம் வேகத்தை அதிகரித்துப் போகவேண்டிய இடத்தை அடையவேண்டும். இந்த மாட்டு வண்டிக்காரரர் நிலைமையில் தான் அந்தப் பேச்சாளர் இருக்கிறார்” என்றார்.

நம் வளர்ச்சி பொறுக்காமல் சிலர் திட்டுவார்கள், நாம் அதைக் தாங்கிக் கொண்டு வளர்ச்சி வேகத்தைக் கூட்ட வேண்டும். சோர்ந்து போகக் கூடாது.

பிறர் ஏசும் ஏச்சை உரமாக்கிக் கொண்டு வளர வேண்டும் என்று அடிக்கடி ராஜாஜி சொல்வார்.

“நம் வளர்ச்சி அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் நம்மைக் கவனிக்கிறார். நம்மைப்போன்று வளர முடியவில்லை. அந்த இயலாமை நம் மேல் கோபமாக மாறுகிறது. கோபம், கடுஞ்சொல் பேசவைக்கிறது. இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்தால், அவர் மேல் இரக்கம் உண்டாகும். நமது வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய அளவுகோல் பிறரது நியாயமற்ற வசை” என்கிறார் ராஜாஜி.

மகாபாரத போர் நடந்து கொண்டிருந்தது. அன்றைய நாளில் தர்மர் கர்ணனை எதிர்கொண்டு அவனை அழிக்க ஆக்ரோஷத்துடன் போர்க்களம் புகுந்தார். பாண்டவர் படைகளும் கௌரவப் படைகளும் ஒன்றுக்கொன்று சலிக்காமல் போரிட்டன. தர்மர் கர்ணனையும், கர்ணன் தர்மரையும் குறிவைத்து தாக்கினர். கர்ணனின் கடுமையான தாக்குதலை தருமரால் எதிர்கொள்ள முடியவில்லை. அதனால் பாசறைக்குச் சென்று சிறிது நேரம் ஓய்வெடுத்து பின்பு மீண்டும் போர்க்களம் புகுந்தார். இம்முறை கர்ணனை எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்ற துடிப்புடன் தர்மர் போரிட்டார். ஆனால் இம்முறையும் கர்ணன் அசுர வேகத்துடன் தர்மர் மீது அம்பு மழை பொழிந்தான். தர்மரின் உடல் முழுவதும் அம்புகள் காயப்படுத்தின. உயிர் தப்ப எண்ணி தர்மர் போர்க்களத்திலிருந்து பின்வாங்கி மீண்டும் பாசறைக்குத் திரும்பினார். தர்மரின் கண்கள் பொங்கின. கர்ணனின் தாக்குதலை நினைத்து நிலைகுலைந்தவராய் திரௌபதியின் மடிமீது சாய்ந்தார். தர்மரை போர்க்களத்தில் காணாத அர்ஜுனன் பீமனிடம், "நீ சென்று அண்ணன் வேறு எங்கும் உள்ளாரா என்று பார்த்து வா" எனறு கூற, அதற்கு பீமன் போர் நடக்கும்போது போர்க்களத்தை விட்டு வெளியே போவது ஒரு வீரனுக்கு இழுக்கு. ஆதலால் நான் செல்ல முடியாது, வேண்டுமானால் நீ சென்று பார்த்துவா என்று மறுத்து விட்டான்.

அந்நேரம் பார்த்து கிருஷ்ணர் அவ்விடம் வருகிறார். கிருஷ்ணரிடம் அர்ஜுனன் விஷயத்தை கூற, பாசறையில் சென்று பார்க்கலாம் வா என்று கிருஷ்ணர் அர்ஜுனனை அழைத்துப் போனார்.

கிருஷ்ணரும் அர்ஜுனனும் பாசறைக்குள் நுழைந்தனர். அங்கே திரௌபதியின் மடியில் தலைவைத்து வலியுடன் தருமர் படுத்திருந்தார். அர்ஜுனனைக் கண்டதும் தருமர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். "அர்ஜுனா! போர்க்களத்தில் கர்ணனை தாக்கி அவனுடைய அகங்காரத்தை வேரறுத்து அவனை அழித்திருப்பாய் என்று எண்ணி நான் மகிழ்கிறேன். உன் திறமையைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. உன்னுடைய வீரத்திற்கு ஈடுஇணை இல்லை" என்று தருமர் புகழாரம் சூட்டினார். உடனே அர்ஜுனன் இடைமறித்து, "இல்லை அண்ணா நான் இன்னும் கர்ணனை எதிர்கொள்ளவில்லை. போர்க்களத்தில் தங்களைக் காணாமல் அச்சமுற்று பாசறைக்கு வந்தோம்" என்று கூறினான். இதனைக் கேட்ட தருமர் மிகவும் கோபம் கொண்டு, "அர்ஜுனா நீ வில்வித்தையில் வீரன் என்று ஊரார் பேசக் கேட்டு மகிழ்ந்திருந்தேன். ஆனால் அவ்வித்தை எதற்கும் பயன்படாமல் வீணாக இருப்பது பெரும் அவமானம். இதனால் நீ உன்னுடைய காண்டீபத்தை தூக்கி எறிந்து விட்டு காட்டிற்கு சென்றுவிடு" என்று மேலும் பலவாறு கூறி திட்டினார்.

உடனே அர்ஜுனன் கிருஷ்ணரிடம், "கிருஷ்ணா எவர் எனது காண்டீபத்தை விமர்சனம் செய்கிறார்களோ அவர்களை நான் கொன்று

விடுவதென்று மனதில் சங்கல்பம் வைத்துள்ளேன். இவர் எனது காண்டிபத்தை ஏளனம் செய்துவிட்டார். அதனால் எனது சங்கல்பத்தின்படி நான் இவரை கொல்லப் போகிறேன். எனது அண்ணனைக் கொன்றுவிட்டு என்னால் உயிர் வாழ முடியாது. எனவே அதே உடைவாளால் எனது தலையை கொய்து மடியப் போகிறேன்" என்று கூறி தருமரைக் கொல்ல எத்தனித்தான்.

உடனே கிருஷ்ணர் இடைமறித்து, "அர்ஜுனா கொஞ்சம் பொறு; இவரை நீ கொல்ல வேண்டும் அவ்வளவுதானே, உன்னால் அவரை எவ்வளவு தரக்குறைவாக திட்ட முடியுமோ அப்படித்திட்டு" என்றார். இதனைக் கேட்ட அர்ஜுனன், "ஏ தருமரே! போர்க்களத்தில் எதிரிக்கு பயந்து போரிடுதற்கு அஞ்சி புறமுதுகு காட்டி ஓடி வந்து ஒரு பெண்ணின் மடியில் படுத்திருக்கிறாய். இதனால் நீ ஒரு ஆண்மகன் என்று கூறிக்கொள்ளாதே. நீ ஒரு கோழை. கோழையான நீ என் வீரத்தைப்பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது" என்று ஏகவசனத்தில் தருமரை பொறிந்துத் தள்ளியவன் பின்னர் கிருஷ்ணரை நோக்கி, "கிருஷ்ணா! தருமரை கொல்ல நினைத்த என்னை தடுத்து நிறுத்தி அவரை அவமரியாதையாகப் பேசச் சொன்னாய். இதனால் நான் கொண்ட சங்கல்பம் எப்படி பூர்த்தியாகும்?" என்று கேட்டான். அதற்கு கிருஷ்ணர், "அர்ஜுனா உனது சங்கல்பம் பூர்த்தியாகிவிட்டது. எப்போது அவரை அவமரியாதையாக பேச தொடங்கினாயோ அப்போதே அவரை நீ கொன்றுவிட்டாய். **ஒருவரை அவமதிப்பதும் கொல்வதும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்றேயாகும்**" என்றார்.

இதனைக் கேட்ட அர்ஜுனன், "சரி கிருஷ்ணா! அப்படியானால் நான் என்னை கொன்று என் சொல்லை காப்பாற்றுகிறேன்" என்றான். அதைக்கேட்டு கிருஷ்ணர் புன்முறுவலுடன், "அர்ஜுனா! இப்போது நான் சொல்கிறபடி செய். உன்னை நீயே புகழ்ந்து பேசு" என்றார். அர்ஜுனன் தன்னைத்தானே புகழத் தொடங்கினான். "என்போல் வில்வித்தையில் திறமையானவர் எவ்வுலகிலும் இல்லை. காண்டீபம் என்ற சக்திவாய்ந்த ஆயுதம் போல் வேறு ஏதேனும் இந்த உலகில் உள்ளதோ? நான் மிகவும் பேறு பெற்றவன் என்று பலவாறாக தன்னைத் புகழ்ந்து கூறிக் கொண்டவன் கிருஷ்ணரை பார்த்து, "கிருஷ்ணா! நான் என்னை மாய்த்துக் கொள்வதற்கும் என்னை நானே புகழ்ந்து பேசுவதற்கும் என்ன சம்பந்தம் உள்ளது?" எனக் கேட்டான்.

*கிருஷ்ணரோ, "ஏன் இல்லை? அர்ஜுனா! கவனமாக கேள்.*

**எவன் ஒருவன் தன்னைத் தானே பெருமையாக பேசுகின்றானோ அச்செயலானது தற்கொலைக்குச் சமமானது!** நீ உன்னைப்பற்றி நீயே பெருமையாக பேசியதால் ஏற்கனவே நீ இறந்துவிட்டாய்" என்று கூறினார்.

**ஒருவரை அவமரியாதையாக பேசுவது கொலைக்குச் சமம். அதுபோல் தன்னைத்தானே தற்பெருமையாக பேசிக்கொள்வது தற்கொலைக்குச் சமம்.**

திருச்சிற்றம்பலம்

Advertisement

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )







பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

**BeyondexC Network Solutions**
பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# ஞான வழிபாடு

**'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்**
**அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்**
**எவரெவர்க்கு உதவினர் எவரெவர்க்கு உதவிலர்**
**தவர்அவர் நினைவது தமை உணர்வதுவே' – சிவபோகசாரம்**

இச்செய்யுள் நமக்கு எத்தகைய அரிதான மெய்யறிவைப் புகட்டுகிறது.

வினையின் வழி வந்ததுதான் இப்பிறவி அல்லது இவ்உடல். நாம் அனுபவிக்கும் உலகியல் இன்பதுன்பங்களும் அருளியல் அவத்தைகளும் வினைகளுக்கு ஏற்றவாரே நடைபெறுகின்றன. எவரும் நமக்கு பகைவர் அல்லர். நாமே நமக்குப் பகைவனாய் இருக்கிறோம் என்பதை ஆய்ந்து ஆய்ந்து பார்த்தால் உண்மையை உணர்ந்து கொள்ளலாம். எதற்கெடுத்தாலும் பிறரைக் குற்றம் சாட்டியே பழகிவிட்டோம். அதிலும் நன்மை பயக்கும் செயலை, தான் செய்யவில்லை என்றாலும் தானே செய்ததாகச் சொல்வதும், தீமை விளைவித்த செயலை தானே செய்திருந்தாலும் தான் காரணமில்லை என நா கூசாமல் பொய் சொல்லுவதற்கும் தயங்குவதில்லை. முள்ளின் மீது கால் வைத்தோமென்று உணர்ந்து நம்மீதுள்ள அறியாமையினை ஏற்றுக்கொள்வதில்லை. முள் குத்திவிட்டதென்று முள்ளின் மீது பழி சொல்கிறோம். வினைகள் பிறவிகள் தோறும் தொடர்கின்றன. வினைகளின் விளைவுகளை நாம் அனுபவிக்க மறுத்த போதும் ஊட்டுவிக்கப்படுகின்றன. 'ஊட்டுகின்ற வல்வினை' என்பார் நம்பெருமான். இவ்வுண்மையை யாரால் அறிந்து நீக்கிக் கொள்ளமுடியும். அதைத்தான், 'தவர் அவர் நினைவது தமை உணர்வதுவே' என இப்பாடல் தவம் செய்பவர் என்போர் 'தன்னை உணர்ந்து கொள்வதுவே' என அறிவுறுத்துகின்றது. எனவே தன்னை உணர்ந்த தவசிகளால் மட்டுமே முழுவதுமாக ஊழ்வினையை நீக்கிக் கொள்ளமுடியும்.

**'தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு**
**தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே'**

என்று வள்ளல் பெருமானும் தன்னை அறிந்து பேரின்பப் பெருநிலை அடைய வெண்ணிலாவிடம் தந்திரம் கேட்கிறார். ஏன் தன்னை அறிய வேண்டும்? தன்னை அறிதலின் விளைவுகள் என்னென்ன? தன்னை அறியாமையால் வரும் கேடுகள் என்னென்ன? என்பவற்றிற்கெல்லாம் விடைகாண்பதே அவசியமாகும். தன்னை அறிகின்றபோது ஓர் உண்மை வெளிப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு பிறப்பிலும் கிடைக்கின்ற இவ்வுடலை, 'தான்' என்று நினைப்பது அறியாமை. இன்பமோ துன்பமோ அனைத்தையும் உடலோடு கூடிய நிலையில் உயிரே அனுபவிக்கிறது. ஆகவே இவ்வுயிருக்கு ஊதியம் தேடவேண்டும்; உடலுக்கு ஊதியம்

தேடுகின்றபோது அதனால் வினைகளும், வினைகளால் ஊழும், ஊழ்வினையால் பிறப்பும் தொடர் கதைகளாகின்றன. ஆகையினால்தான் அருணகிரிநாதர்,

**'ஆவி சாவியாகாமல் நீசற்றருள்வாயே'**

என்று உயிருக்கே ஊதியம் தேடச்சொல்கிறார். பயிர் விளைச்சலின்போது நன்கு மணி பிடிக்காமல் பதராகிவிட்டால் சாவியாகிவிட்டது என்பர். அதுபோல ஆவியாகிய உயிர்ப்பயிர் சாவியாகாமல் காத்து அருள வேண்டுகின்றார். அதோடு திருவள்ளுவதேவரும்,

**'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு'**

எனவும் உயிருக்கே ஊதியம் தேடச் சொல்கின்றார். உடலுக்கு அல்ல. இதனை அறிவு பூர்வமாக உணர்தலே தன்னை அறிதலாகும்.

பிறவி எதனால் ஏற்படுகின்றது. பிறவிப் பெருங்கடலை எவ்வாறு கடப்பது. நித்தியப் பொருள் எது? அநித்தியமானவை எவை எவை என அறிந்துகொள்ள வேண்டும். நம்மை கரை சேர்க்கும் ஓடக்காரன் யார் என்பதையும் அறிந்து அந்தப் படகைப் பற்றிக்கொண்டால் போதும், கரை சேர்ந்துவிடலாம். இப்படி ஒவ்வொரு படியாக ஆய்ந்து ஆய்ந்து நாம் பார்க்கின்றபோது வெளியில் தேடிய மெய்ப்பொருள் நமக்குள்ளேயே இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும். பிறகென்ன வெளியில் தேடியது உள்ளேயே இருக்கிறது. பாலை வைத்துக்கொண்டு வெண்ணெய்க்கு அலைந்த கதைதான். என்ன செய்யவேண்டும்.

**'காணவேண்டும் என்றுநீர் கடல்மலைகள் ஏறுவீர்**
**ஆணவமதல்லவோ அறிவிலாத மூடரே**
**வேணுமென் றவ்வீசர் பாதம்மெய்யுளே தரிப்பிரேல்**
**தாணுவாக நின்றசீவன் தான் சிவமதாகுமே.'**

திருமூலர் தன்னை அர்ச்சிக்க சொன்னதின் காரணத்தை சிவவாக்கியர் இங்கு விளக்கியுள்ளார். பாலிலிருந்து தான் வெண்ணெய் கிடைக்கிறது என்று தெரிந்தும் அதனைப் பெற முயல்வதில்லையே. சீவன் சிவமாக வேண்டுமானால் எத்தகைய முயற்சி எடுக்கவேண்டும். எடுத்துக்காட்டாக பாலில் இருந்து வெண்ணெயைப் பிரித்து எடுக்க, பாலைக் கொதிக்க வைத்துப் பின் ஆறவைத்து பதமாக உறைகுத்தி தயிரானதும், அதனைக் கடையக் கடைய வெண்ணெய்திரண்டு வெளிவருகிறது. இறைவழிபாடும் அவ்வாறுதான். பாலில் உள்ள வெண்ணெயை வெளியில் கொண்டுவருவதற்கே பக்குவமாய் இத்தனை செயல்கள் செய்ய வேண்டியுள்ளது. இதுவே சரியாக பக்குவப்படாமல் உறை குற்றினால் பால் திரிந்து கெட்டுவிடும். நம் ஆன்மாவின் உள்ளேயிருக்கும் கடவுள் பிரகாசமும் பக்குவமாய் முயன்று, பயின்று வைராக்கியத்துடன் செயல்பட்டால்தான் அஃது வெளிப்படும். எனவேதான் நம் வள்ளல்

பெருமானார் இதனைப் 'பதம் பொருந்த அனுபவிக்கும் பழமே' என்பார். அருள் நிலையைப் பெறுவதற்கு காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிந்தார் எல்லாம் ஏமாந்து விட்டனர் என்கிறார் நம் பெருமானார்.

**கற்பங்கள் பலகோடி செல்லத் தீய**
**கனலின் நடுஊசியின் மேல் காலை ஊன்றி**
**பொற்பற மெய் உணர்வின்றி உறக்கமின்றி**
**புலர்ந்து எலும்பு புலம்பட ஐம்பொறியை ஓம்பி**
**நிற்பவர்க்கு ஒளித்து மறைக்கு ஒளித்து யோக**
**நீண் முனிவர்க்கு ஒளித்து அமரர்க்கு ஒளித்து மேலாம்**
**சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்து ஞானத்**
**திருவாளர் உட்கலந்த தேவதேவே.**

இதுதான் வள்ளலார் கூறும் மெய்நெறி; வள்ளலார் வகுத்த வழிபாடு; வள்ளல் அடைந்த பெருநிலை. கற்பகாலம் நடு நாடியில் மனம் வைத்து ஊண், உறக்கம் இல்லாமல் தவம் செய்தவர்க்கெல்லாம் காட்டாமல் அறிவே வடிவான இறைவனது திருவடிகளில் அறிவு மயமாய் நிறைந்து கலந்து வழிபாடு செய்யும் ஞானிகளை உட்கலந்து நின்று காட்சி அருளுகிறான். தேவர்களுக்கும் கடுந்தவம் புரியும் யோகியர்க்கும் பழமையான வேதத்திற்கும் மறைத்தவன், மெய்ஞ்ஞானிகளை ஞானவழிபாடு செய்யும் சித்தர்களையும் இறைவன் தேடிவந்து கலந்து அருட்காட்சித் தருகின்றான்.

சித்பதம் அறிவாகிய திருவடி; சின்மயம் அறிவுமயமாய் நிற்றல். அறிவாகிய திருவடியில் அறிவுமயமாகி வழிபாடு செய்தலே அறிவுடைய செயல். திருநாவுக்கரசரும்,

**'விறகில் தீயினன் பாலில் படுநெய் போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே'** என்கிறார்.

விறகில் தீயும் அதற்குள்தான் இருக்கிறது; பாலில் நெய்யும் அதற்குள்தான் இருக்கிறது. ஆதியாகிய சோதியானவனும் அவ்வாறே நமக்குள்தான் இருக்கிறான். அவன் எப்போது வெளியே வருவான்? முதலில் அவனிடத்தில் உறவு வைத்துக்கொள்ள வேண்டும், பிறகு உணர்வு என்ற கயிற்றினால் முறுக வாங்கிக் கடையவேண்டும். உணர்வு என்பது ஒத்த உணர்வு; இறைவனோடு ஒன்றி நிற்கும் மேலான காதல் உணர்வு; முறுக வாங்கிக் கடைதல் என்றால் முதிர்ந்த அன்பின் மிகுதியால் வழிபட்டு நிற்றல்; அஃதாவது 'அன்பெனும் ஓர் உச்சிப் பழுத்து அளிந்து' என்று பெருமான் கூறியுள்ளது போல் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அறிவு பூர்வமாக ஞானவழிபாடு செய்தலாகும். ஞானிகளும் சித்தர்களும் ஞான வழிபாட்டையே செய்து

வழிபடவேண்டுமென்று அறிவுறுத்துகின்றனர். 'பரசிவம் சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரம நிதியம்' என்றே திருவடிப் புகழ்ச்சியில் எங்கும் பரவியுள்ள அது சின்மயம் என்னும் அறிவுமயமாய் இருக்கிறது என்றே சொல்கிறார். ஆகவே அறிவுப்பூர்வமாய் வழிபாடு செய்யும் மெய் அன்பர்களை, முத்தர்களை இறைவனே தேடி ஓடி வருகிறான். இதனை,

**'பற்றறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்பழம்போல்**
**விழுங்கு கின்ற பரமே'**

என்ற வாக்கியத்தினால் அறிந்து கொள்ளலாம். வாழைப்பழம் சாப்பிடுகின்றபோது தங்கு தடையின்றி உள்ளே செல்லும்; அவ்வாறே மெய்யடியவர்களை எந்த தடையும் இல்லாமல் ஆட்கொள்கின்றான். முன்பே கூறியதுபோல் தகுதி ஒன்றுமட்டும் போதும். தகுதி இல்லாமல் இறையருளின் ஒரு பகுதியையும் பெற இயலாது. விகுதியாய் எஞ்சி நிற்பது பிறப்பும் இறப்புமே. நாம் செய்வது எல்லாம் யாருக்குத் தெரியப்போகிறது என்று நினைக்கிறோம். நம்முடைய ஒவ்வொரு செயல்களும் அந்தக்கரணமாகிய சித்தத்தில் பதிவாகிக்கொண்டே இருக்கின்றன. இந்தக் கணிப்பொறியில் எவ்விதமான இடர்ப்பாடுகளும் ஏற்படுவதில்லை. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமானால் அத்தனைப் பிறவிகளின் எண்ணப்பதிவுகளும் இதில் பதிவாகியுள்ளன. வடமொழியில் இதனை 'சம்சுகாரம்' என்று சொல்வர்.

தகுதி என்பது அருள். அருள் அறியார் தமையறியார் என்று பெருமான் கூறியுள்ளதை சிந்தையில் கொள்ள வேண்டும். ஏனெனில் அருளைப் பெற்றால் மட்டுமே அறியாமையாகிய இருளை களையலாம். அருள் என்பது ஒளி, இருள் என்பது அறியாமையால் வரும் வினைப்பயன்கள். இஃது மருள் என்னும் மயக்கத்தால் விளைகின்றது. மயக்கம் என்ற நிலையில் தடுமாற்றம் நிகழும். என்ன செய்கிறோம் என்பதை உணர முடியாத நிலையே மருளாகும். மயக்கமாகிய மருள் நீங்கினால் கிடைப்பது தெருள். தெருள் என்பது தெளிவு, அஃதாவது மெய்ஞ்ஞானம். மெய்யறிவாகிய மெய்ஞ்ஞானத்தால் மட்டுமே சித்தத்தில் பதிந்துள்ள அத்தனைப் பிறவிகளின் எண்ணப் பதிவுகளையும் அழித்துவிட முடியும். இவ்வெண்ணப் பதிவுகளையே மும்மலம் என்றும் ஐந்து மலம் என்றும் வகைப்படுத்தியுள்ளனர். அவன் அருள் கிடைத்தால் எஞ்சியுள்ள வினைப்பயன்கள் முழுவதுமாக இறைவனால் எரித்து அழிக்கப்பட்டுவிடும். சிவபெருமான் முப்புரம் எரித்தான் என்று புராணங்கள் கூறுவது வினைப் பயன்களாகிய மும்மலங்களை எரித்து அழித்து இல்லாமல் செய்வதே. திருமூலநாதர் திருமந்திரத்தில் இம்மல நீக்கத்தை,

**அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்**
**முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறிவாரே.!**

என்று கூறி தெளிவுபடுத்தியுள்ளார். எனவே அருளைப் பெற்றால் மட்டுமே மும்மலமாகிய இருளை நீக்கிக் கொள்ளலாம். 'இருளறுத்து எனை ஆண்ட அருட்பெருஞ்ஜோதி' என்ற பெருமானின் திருவாக்காலும் இதனை உணர்ந்து கொள்ளலாம். திருவள்ளுவதேவரும் இம்மல நீக்கத்தை,

**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு**

இக்குறளின் உட்பொருளை கூர்ந்து ஆய்ந்து பார்த்தால் மருள் என்னும் மாயை நீங்கினால் மாசு அகன்ற காட்சியாகிய பேரின்பம் பயக்கும் என்பதைப் புரிந்துகொள்ளலாம். இருளும் மருளும் நீங்க அருள் வேண்டும். ...தொடரும்

**திருச்சிற்றம்பலம்**

# திருமுகக் குறிப்புகள்

**வள்ளற் பெருமானார் தம் அன்பர்களுக்கு**
**வரைந்தருளிய கடிதங்களை இப்பகுதியில் காண்போம்**

## இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகம்

அருளறி வொழுக்கம் முதலிய சுபகுணங்களிற் சிறந்த சிரஞ்சீவி இரத்தின முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் உண்டாவனவாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மகா ஶ்ரீ நாயக்கரவர்களுக்கு தற்காலமிருக்கின்ற தேக பக்குவத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் மென்கிற விசாரம்மிகவும் உடைய வனாகவிருக்கின்றேன். நான் அவசியம் இரண்டு அல்லது நான்கு மாதத்திற்குள் அவ்விடம் வருவேன். அதை நாயக்கரவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவசியம் வருவேன். தாங்களும் சாக்கிரதையோடிருக்க வேண்டும்.

சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் படிக்க வேண்டும் என்று வருகின்றான். அவனை படிப்பின் விஷயத்தில் மாத்திரம் அடிக்கடி விசாரிக்கவேண்டும். தங்களுடையவும் நாயக்கருடையவும் க்ஷேம சரித்திரங்களை விரைவில் தெரிந்துக் கொள்ள வேண்டும். மனம் அவலங் கொள்ளுகின்றது. ஆகலில் தெரிவிக்க வேண்டும்.

சிரஞ்சீவி சிரஞ்சீவி

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

இஃது சிரஞ்சீவி இரத்தின முதலியார் அவர்களுக்கு கொடுப்பது.

**திருச்சிற்றம்பலம்**



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

உறவினில் உறவும் உறவினில் பகையும் 651
அறனுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 652

உறவு, பகை என இரண்டு நிலைகள். இரண்டும் இருவேறு நிலைகள். உறுவது உறவு. உறுகின்றது உறவு. பகைப்பது பகை.

உறவு வேண்டும். பகை வேண்டா.

உலக உயிர்களில் (உயிரினங்களில்), உலகப் பொருள்களில் ஒன்றுக்கு ஒன்று இயல்பாகவே உறவுடையவை உண்டு. பகையுடையவை உண்டு.

பெற்றோர் பிள்ளைகள் உறவு. உற்றார் உறவினர் உறவு. இவர்களுக்குள்ளே பகைத்துக் கொள்வதும் உண்டு. பின்பு கூடிக் கொள்வதும் உண்டு. தற்காலிகப் பகையும் உண்டு. நிரந்தரப் பகையாகி விடுவதும் உண்டு.

கீரியும் பாம்பும் பகை. எலியும் பூனையும் பகை. பூனையும் நாயும் பகை. இவை நிரந்தரப் பகை. இவை உறவாடுவது அரிது.

மானும் புலியும் பகையன்று; உறவும் அன்று.

நாய் பூனைக்குப் பகை; மனிதனுக்கு நட்பு. நாய்க்கு நாய் பகை.

இருநாய்கள் ஒன்றாயிரா. ஆடுமாடுகள் மந்தையாக மேயும். மந்தையாக இருக்கும். நாய்கள் அப்படி இரா, இனப்பகை மிகுதி.

நீருக்கும் நெருப்புக்கும் பகை; உறவும் உண்டு. நெருப்புக்கும் காற்றுக்கும் பகை; உறவும் உண்டு. மருந்துச் சரக்குகளில் பகைச் சரக்குகள் உண்டு. அவை உறவு சேரா. சேர்க்கப்படின் இரண்டுமே கெட்டுப்போம். உறவுச் சரக்குகளும் உண்டு. அவை சேரின் வீரியம் மிகும்.

மக்கட் பிறப்பினர்க்குப் புறப்பகையும் உண்டு. அகப்பகையும் உண்டு. புறப்பகை பகைவர்கள், எதிரிகள். அகப்பகை உட்பகையான ஆறுகுணங்கள். காமம், குரோதம் (கோபம்), உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறும் மனிதனின் உட்பகைகள். புறப்பகைகளை வெல்வது கூடும். அகப்பகையை வெல்வது எளிதன்று; அரிது; மிக அரிது; மிகமிக அரிது. அவை நம்மை வென்று விடும். சில சமயங்களில் கொன்றும் விடும். உட்பகைகளோடு உறவு கொள்வதே மனித இயல்பு. காமத்தோடு உறவு, கோபத்தோடு உறவு, லோப, மோக, மத, மாச்சரியங்களோடு உறவு; இவ்வுறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும்; அறுத்துக் கொள்ள வேண்டும். உறவு பகைகளைப் பற்றிய சிந்தனை இவ்வாறாகப் பலவாறு விரியும். ஓரளவில், இவ்வளவில் நிறுத்தி, இனி அகவல் அடிகளுக்கு வருவோம்.

உறவினில் உறவும் - நல்ல உறவோடு உறவும்
உறவினில் பகையும் - நம்மோடு உறவாடும் தீய உறவுகளோடு பகையும்
அறனுற வகுத்த - அறமாக உற வகுத்தருளிய
அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

நல்ல உறவுகளோடு உறவு கொள்வதையும், நம்மோடு உறவாடும் உட்பகை போன்ற தீய உறவுகளோடு பகையையும், பகைத்துக் கொள்வதையும் வாழ்வியல் அறமாகவே வகுத்தருளியுள்ளது அருட்பெருஞ்ஜோதி.

எல்லா உறவுகளிலும் சிறந்த உறவு, தலை சிறந்த உறவு, கடவுள் உறவு. அதை 'உயிர் உறவு' என்பார் நம் பெருமான். அருட்பெருஞ்ஜோதியை என் உயிர்த்தாயே! என் உயிர்த்தந்தையே! என் உயிர்த் துணையே! என் உயிர் நட்பே! என் உயிர் உறவே! என்று இதே அருட்பெருஞ்ஜோதி அகவலில் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வழிபடுகிறார். (அடி எண் 1071 - 1200)

ஆண்டவன் - அடியார் உறவு உயிர் உறவு. எல்லா உயிர்களிலும் கடவுளைக் கண்டு உயிர் நலம் பரவி வாழ்தல் உறவினில் உறவாகிய உயிர் உறவு.

"உயிருள் யாம் எம்முள் உயிர்" (அடிஎண் 973) என்பது அருட்பெருஞ்ஜோதிக்கும் நமக்கும், எல்லா உயிர்களுக்கும் உள்ள உயிர் உறவு. உறவினுள் உறவு.

**பகையினிற் பகையும் பகையினில் உறவும் 653**
**அகைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 654**

பகையினில் - பகைக்க வேண்டியவற்றில், பகைக்க வேண்டிய வகைகளில்
பகையும் - பகையையும்
பகையினில் - நம்முடன் பகை கொள்வோரிடத்தில்
உறவும் - உறவையும்
அகைவுற வகுத்த - கூறுபாடு உற வகுத்தருளிய
அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

உறவினில் உறவு, உயிர் உறவு என்றால், பகையினில் பகை ஜென்மப்பகை (ஆயுட்பகை)

கடவுளோடும், பிற உயிர்கள் அனைத்தோடும் உயிருறவு கொள்ள வேண்டும். பகைக்க வேண்டிய தீய உறவுகளில், நம்மோடு உறவு கொண்டாடும் உட்பகை முதலானவற்றில் ஜென்மப் பகை கொள்ள வேண்டும். ஆயுட்பகை கொள்ள வேண்டும். வாழ்நாள் முழுவதும் அவற்றோடு பகை கொள்ள வேண்டும். அடுத்த பிறப்பிலும் அவை நம்மை அண்டக் கூடாது.

உலகியலில் பகைவர்களிடத்தும் பகைமை நீக்கி உறவு கொண்டாடும் மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். போரில் வெற்றி பெற்ற

பின்னர், பகைவரிடம் நட்புப் பூண்பதும் மகட்கோடலும் (பெண் கொண்டு மணமுடித்து உறவு கொள்ளலும்) பண்டைத் தமிழகத்தில் அரசியலறமாக விளங்கியுள்ளன. பகையை உறவாக்கிக் கொள்வதும் பகையினில் உறவு.

வள்ளற்பெருமான், உறவு பகை என்ற இரண்டும் கடந்த பெருநிலையை எட்டி விடுகிறார்.

**உறவு பகை என்றிரண்டும்**
**எனக்கிங்கு ஒன்ற தாயிற்றே**
**ஒன்றென்(று) இரண்டென்(று) உளறும்**
**பேதம் ஓடிப் போயிற்றே — எனக்கும் உனக்கும் 64(5027)**

இரவு பகலற்ற இடத்தை எட்டிவிட்ட வள்ளலாருக்கு உறவு பகை என்ற இரண்டும் ஒன்றதாயிற்று. பகைவனுக்கும் அருள்வாய் எனும் “பகையினில் உறவு” நிலைக்கு அவர் உயர்ந்து விட்டார்.

திருச்சிற்றம்பலம்

# பாடலும் பொருளும்

# திருஅருட்பா எனும் மாமறை

**பேராய வண்டங்கள் பலவும் பிண்ட**
**பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்**
**வாராய பலபொருளுங் கடலு மண்ணும்**
**மலையுளவுங் கடலுளவு மணலும் வானும்**
**ஊராத வான்மீனு மணுவு மற்றை**
**உள்ளனவு மளந்திடலாம் ஓகோ! உன்னை**
**யாராலு மளப்பரிதென் றனந்த வேதம்**
**அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே — மகாதேவமாலை (54)**

சூரியனும் அதனைச் சுற்றியுள்ள கிரகங்களும் ஓர் அண்டம் என்று கொண்டால் இவைகட்கு அப்பால் இன்னும் எத்தனை எத்தனை அண்டங்கள் உள்ளனவோ தெரியவில்லை. அந்த அண்டங்களைக் கணக்கிட்டு மாளவில்லை.

இந்த அண்டங்களில் வாழ்கின்ற ஜீவன்களை ஒருவாறு ஊர்வன, பறப்பன, உறுவன, நடப்பன என்று கணக்கிட்டுள்ளோம். தாயின் கருப்பையில் இருந்து பிறந்தவை, முட்டைகளின் மூலமாய் வெளிவந்தவை, வியர்வையிலிருந்து தோன்றியவை, பூமியிலிருந்து முளைத்தவை என்றும் நான்கு வகையாகப் பிரித்துள்ளோம்.

மேலும் ஓரிடம் விட்டு ஓரிடம் நகரக்கூடிய அதாவது அசைவை உடைய ஜீவன்கள் என்றும் இடம் விட்டு இடம் பெயராத அதாவது

அசையாத தாவரம் போன்றது என இருவகையாகவும் ஜீவன்களைப் பிரித்து அறிந்துள்ளோம். ஆனால் எல்லா ஜீவன்களையும் அவைகள் எடுத்துள்ள பிண்டவகைகளை எண்ணிவிடமுடியுமா? எறும்பு முதல் யானை ஈறாக எத்தனை விதமான உடம்புகள் அவற்றை எண்ண முடியுமா?

பிண்டங்களிலும் அண்டங்களிலும் உள்ள ஜடப் பொருள்கள் எத்தனை விதம் அவற்றை இவ்வளவுதான் என்று எண்ணிவிட முடியுமா?

கடல்கள் எத்தனை அலைகளில் உள்ள நீரின் அளவு என்ன? யாரால் அளந்து கூற முடியும்?

இந்த பூமியின் எடை என்ன? யாரால் சரியாகக் கூறமுடியும்?

கடல், நீர் மட்டும் கொண்டுள்ளது போல தோன்றுகின்றது. ஆனால் அந்தக் கடலுக்குள் என்னென்ன பொருள்கள், எத்தனை எத்தனை உயிரினங்கள் எவ்வளவு எவ்வளவு வகைகள் உள்ளன என்று கணக்கிட்டுக் கூற முடியுமா? அதே போல மலைகள் மொத்தம் எத்தனை? அந்த மலைகளுக்குள் உள்ள பொருள்கள், வளங்கள் என்னென்ன? எவ்வளவு எவ்வளவு என்று யாரால் கூற முடியும்.

மணலின் எண்ணிக்கையைக் கூற முடியுமா? வானை அளக்க முடியுமா? வானம் என்பது செல்லச் செல்ல சென்று கொண்டே இருக்கும் வெளியாயிற்றே. அது எங்கே முடிவடைகின்றது? அந்த வானின் நீள அகலத்தை அளக்க முடியுமா?

வாலணு, திரவணு, லகுவணு என்றெல்லாம் கூறுகின்றார்களே; அந்த அணுக்களின் எண்ணிக்கையை எவ்வளவு என்று யாரால் கூற முடியும்? இவைகள் போக இன்னும் என்னென்ன உள்ளனவோ? அவைகள் எவ்வளவு உள்ளனவோ? என்று கணக்கிடமுடியுமா?

அண்டங்களையும் - பிண்ட பேதங்களையும் - பல பொருள்களையும் - கடலையும் - மண்ணையும் - மலையையும் - கடலிலுள்ளனவற்றையும் - மலையில் உள்ளனவற்றையும் - மணலின் மொத்த எண்ணிக்கையையும் - வானின் நீள அகலத்தையும் - அணுக்களின் எண்ணிக்கையையும் மற்றுமுள்ள விடுபட்டுப்போன பொருள்களையும் எண்ணிவிட முடியாது என்பதே உண்மை. ஒருவேளை அவற்றையெல்லாம் கணக்கிட்டு எண்ணிவிட முடிந்தாலும் முடியலாம், இறைவனை அளவிட முடியாதே என்று எல்லா வேதங்களும் உரத்த குரலில் கூவி இளைத்துப் போகின்ற அளவிற்கு அவற்றிற்கும் அப்பாற்பட்டு அதி தூரமாக விளங்கும் மகாதேவன் என்பது பொருள்.

திருச்சிற்றம்பலம்

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

<u>ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை</u>

காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.3,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-

பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

<u>Please donate - Cheque / DD In favour of</u>

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

<u>Please donate through:</u> **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## <u>Please send MO to:</u>

அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் பூரண சித்தி யோகம்

தன்னையறிந்து இன்பமுற... ஒரு நாள் தியான முகாம்...

**ஜீவகாருண்யம், பக்தி, தியானம், சத்சங்கம்...**

இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

நேரம்: காலை 6:30 மணி முதல் இரவு 7:00 மணி வரை

நாள்: 20-11-2016, ஞாயிறு
இடம்: மல்லிகா திருமண மாளிகை,
43, மாமரத் தெரு, அண்ணா கிராமம்,
ஹோட்டல் பொன்னுசாமி பின்புரம்,
**நெய்வேலி - 607 801.**

நாள்: 18-12-2016, ஞாயிறு
இடம்: ஸ்ரீ ராமசாமி கவுண்டர் முத்தம்மாள் திருமண மண்டபம்,
644/1, பல்லடம் ரோடு,
**திருப்பூர் - 641 604.**

தொடர்புக்கு: 94434 89849, 9843644523

*அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்*




இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

**நாள்: டிசம்பர் 23, 24 & 25 வெள்ளி, சனி, ஞாயிறு**
**மூன்று நாட்கள் முழுவதும்**

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
**பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,**
**பொள்ளாச்சி.**

முன்பதிவிற்கு: 94434 89849, 99651 50531

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானம்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 50 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly November 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி*

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

நாள் 27 நவம்பர்

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்: 27-11-2016, ஞாயிற்றுக் கிழமை**

**இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.



## நிகழ்ச்சி நிரல்:

- **அகவல் பாராயணம்**
- **திருவருட்பா இசைக்கச்சேரி:-** வழங்குபவர்
  மயிலை திரு. சற்குருநாதன் ஓதுவார், சென்னை
- **சத்சங்கம்:-** வழங்குபவர்
  கோடையிடி திரு. கங்கை மணிமாறன், சீர்காழி
- **ஜோதி தியானம்**
- **அன்னதானம்**

அனைவரும் அருள் பெற வாரீர்! வாரீர்!!

தொடர்புக்கு: +91 9843644523, +91 9443489849

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அனுகவும்: +91 80126 80865